Regd. No. M. 1530

BALAVINODINI

OR

THE CHILDREN'S FRIEND

An Illustrated Tamil Monthly for Children

TO INSTRUCT AND CHERISH
THE YOUNG HEARTS WITH SWEET INSPIRING
AND
EDUCATIVE NOVELTIES

OFFICE ... 18 JAN 1924

Vol. IV] JUNE 1922 [No. 6

EDITED BY
VARAKAVI TIRU
A. SUBRAMANYA BHARATI

PUBLISHED BY
SRI BALASUBRAMANYAM & Co.,
Royapettah P. O., MADRAS.

2618

JL
LL,9(m2H,M14
M22.4'6.
186454

Inland Rs. 1—8
Foreign Rs. 2—0

பாலவிநோதினி

குழந்தைகளின் அன்பன்

வருடசந்தா தபாற்கூலி யுட்பட	இந்தியா, பர்மா, சிலோன்	ரூ. 1 8 0
	பினங்கு, சிங்கப்பூர் முதலிய வெளிநாடுகளுக்கு	ரூ. 2 0 0
தனி சஞ்சிகை		விலை ரூ. 0 2 6

1. பத்திரிகைக்கு ஜனவரிமீ முதல் டிசம்பர்மீ வரையில் ஒரு வருஷக்கணக்கு. எந்தமாதத்தில் சேர்ந்தாலும் ஜனவரி மாதம் முதற்கொண்டே சஞ்சிகைகள் அனுப்பப்படும். பாதி வருஷத்திலிருந்து சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது. ஒரு வருஷத்திற்குக் குறைந்த சந்தா கிடையாது.

2. சந்தாதாரராய்ச்சேருகிறவர்கள் முழு விலாசத்தையும் தெளிவாய் எழுதி யனுப்பவேண்டும்.

3. சந்தாத்தொகையை முன்னடி செலுத்தியாவது அல்லது வி.பி. யில் கட்டியாவது பத்திரிகையை பெற்றுக்கொள்ளலாம்.

4. வி. பி. யில் பெற்றுக்கோள்வதால் அணு மூன்று அதிகமாய் செலவாகிறபடியால் சந்தாத்தோகையை மணியார்டர் செய்வதே நலம். இது முக்கியமாய் கவனிக்கவேண்டியது.

5. யாருக்கேனும் சஞ்சிகை சேராவிட்டால் ஒரு மாதத்திற்குள் தெரிவித்தால்தான் மறுபடி யனுப்பக்கூடும்.

6. இடம் மாறும் சந்தாதாரர்கள் அடுத்த சஞ்சிகை தங்களுக்குப் புதுவிலாசத்திற்கு வந்து சேரும்வண்ணம் தபாலாபீஸோடு ஏற்பாடுசெய்துகொண்டு நமக்குப் புதுவிலாசத்தையறிவிக்கவேண்டும்.

7. சந்தா நெம்பரைக் குறிக்காமல் எழுதும் கடிதங்கள் கவனிக்கப்படமாட்டா.

விளம்பர விகிதம்.

ஒரு பக்கத்திற்கு ஒரு மாதத்திற்கு	...	ரூபா.	10—0—0
அரைப் பக்கத்திற்கு ,,	...	,,	6—0—0
கால் பக்கத்திற்கு ,,	...	,,	3—0—0

விலாஸம்:—மானேஜர்—பாலவிநோதினி ஆபீஸ்,
இராயப்பேட்டை போஸ்டு, சென்னை.



(4) நாசிங்க அவதாரம்

(1) பகவான் தூணிலிருந்து தோன்றுவது.

186454
600 008

உ

செந்திலாண்டவன் திருவடி துணை.

பாலவிநோதினி

அல்லது

குழந்தைகளின் அன்பன்

ஒரு மாதாந்தப் பத்திரிகை

தொகுதி 4 | 1922ஷு ஜூன்மீ | பகுதி 6

நரசிங்க அவதாரம்

இரணியாக்ஷன் என்னும் அசுரன் பூமியைப் பாயாகச் சுருட்டிச் சமுத்திரத்தில் ஒளித்துவைத்த காரணத்தால், ஸ்ரீ மகாவிஷ்ணு வராகரூபங் கொண்டு, அவனைக் கொன்று, பூமியை முன்போல் நிலைநிறுத்தினாரென்று சென்ற மேமாதத்திய சஞ்சிகையில் வெளியிட்டோமல்லவா? அந்த இரணியாக்ஷனுக்குத் தம்பியான இரண்யகசிபு, அவ்வரலாற்றைக் கேள்விப்பட்டதும், ஸ்ரீ மகாவிஷ்ணுவின்மேல் அடங்காத் கோபங்

கொண்டான்; அப்பெருமானை எந்த விதத்திலாவது கொல்லவேண்டுமென்று கங்கணங் கட்டிக் கொண்டான்; அவருள்ள இடமெங்கும் அவரைத் தேடத் தொடங்கினான்; திருப்பாற்கடலில் அவர் சயனித்திருப்பதாகத் தெரிந்து அங்கும் போய்ப்பார்த்தான்; அவரைக் கண்டுபிடிக்க அவனால் முடியவில்லை—அப்படியிருந்தும், அவர் மீது கொண்ட பொறாமையானது அவனுடைய மனதைச் செல்லரிப்பதுபோலரித்து வந்தது.

பொறாமை கொடியதல்லவா? அதற்கிடங் கொடுப்பவர் மீள்வதுண்டோ?

> " தலையி னிழிந்த மயிரனையர் மாந்தர்
> நிலையி னிழிந்தக் கடை "

என்று உத்தர வேதம் உத்கோஷிப்பது வீண் போமா? ஆகையால் அவன் ஸ்ரீ ஹரியைக் கண்டுபிடித்துக்கொல்வதில் கண்ணுங் கருத்துமாக இருந்தான்; அவர் பெயரோதும் வழக்கத்தை அறவே யொழித்து, எக்காலத்திலும் எந்த விஷயத்திலும் தன்பெயரையே வழங்கிவர வேண்டு மென்று தண்டோரா போட்டுவித்தான். வைதிகோத்தமரையும், அவர்கள் செய்துவரும் யாகாதிகிரியைகளையும் கெடுத்து வந்தான். இவன் புரியுங் கொடுமையால் மூன்று லோகமும் நிலைகெட்டுத் தத்தளிக்கலாயின. முடிவில் தன் விரோதியான ஸ்ரீ ஹரியை வேரறுக்கும் வல்லமையைப் பெற வேண்டுமென்று பிரமதேவனைக் குறித்து அருந்தவஞ் செய்ய அவன் மந்தரகிரியை நாடிச் சென்றான்.

இரணியகசிபு தவஞ் செய்யச் சென்றதும், தேவர்கள் அவனூரைச் சூறையாடினார்கள். கர்ப்பவதியாயிருந்த

அவனுடைய மனைவியான லீலாவதியைத் தேவேந்திரன் கவர்ந்து போயினன். அது கண்ட யாழ்வல்லோராகிய நாரதமாமுனிவர் தேவர்கோனைத் தடுத்து, "இவளோ மகாபதிவிரதை; இவள் வயிற்றிற் பிறக்கும் புத்திரன் உத்தம குணங்களுடையவனுவன்; ஸ்ரீஹரியை வழிபடும் புண்ணிய சீலனும் உங்களுக்கும், மகரிஷிகளுக்கும் வேண்டிய நன்மைகளைச் செய்து தருமத்தை நிலை நிறுத்தவல்லவனுவன். "நிலத்தியல்பால் நீர்திரிந்தற்றாகு மாந்தர்க் கினத்தியல்பா தகுமறிவு" என்பதையறியாயா? அபசாரப்பட்டுக் கெடுதியைத் தேடிக்கொள்ள வேண்டாம். நீயோ நூறு யாகங்கள் செய்து சுவர்க்க லோகத்தை யாளும் பெரும் பாக்கியத்தைப் பெற்றாய். "பிறன்மனை புகாமை யறமெனத் தகும்" என்னும் உபதேச ரத்தினத்தை இழந்து விடுவது உன்போல்வார்க் கழகாகாது. நான் சொல்வதைக் கேள்—

சூதாடல் மதுபானஞ் செய்தல் வேறோர்
தோகையர்மீ தாசையுறல் பொய்த்தலாதி
தீதாமிச் செயல்களிது காறுஞ்செய்த
சீரனைத்தும் பாழாக்கி நாகிற் சேர்க்கும்
தாதாரு மலர்த்தொடையல் தயங்கு மார்பா
சதமகனே. நீயெலா முணர்ந்திருந்தும்
நீதானித் தீச்செயலுக் கிசைந்த தேதோ
நெறிதவருக் கற்பினளை விட்டே காயே—

என்று பல நியாயங்களைச் சொல்லி அவனை யவன்பொன் நாட்டுக்கனுப்பிவிட்டு, லீலாவதிக்கு பகவத் சம்பந்தமான நல்ல உபதேசங்களைப் போதித்து, அவளை யவளுடைய இருப்பிடஞ் சேர்த்துப் போயினர்:—

நிற்க, தவக் கோலம் பூண்ட ஹிரண்யகசிபு மிக்க

மனே வல்லமை யுடையவன்; எடுத்த காரியத்தை முடிக்காமல் திரும்பான். தான் கோரியபடி வரங் கிடைப்பதென்றால் அகோர தவத்தைச் செய்தாக வேண்டுமெனத் தீர்மானித்து மந்தர மலையிலே ஒருத்தியான வனத்தில் உட்கார்ந்தான். வருஷங்கள் பல சென்றன. அவன் மேல் புற்றும் மூடிக் கொண்டது. அவன் தேகம் சுக்குப் போல் மெலிந்து ஒடுங்கியது. ஒரே நிலையாக மனதை நிறுத்தி அகோர தவஞ் செய்யவே அந்த தவாக்கினி உலகத்தை எல்லாம் எரிப்பது போற் பரவியது. தேவர்களையுங்கூடத் தகிக்கத் தொடங்கியது. அதைப் பொறுக்க மாட்டாமல் தேவர்கள் பிரம்மாவிடம் போய் முறையிட்டார்கள். ஆகவே பிரம்மன் அவ்வசுரேந்திரன் முன் பிரத்யக்ஷமாகி என்ன வேண்டுமென்று கேட்டார். இரண்யகசிபு மிக்க சந்தோஷங் கொண்டவனாய்ப் பிரம்மாவை நோக்கி "சுவாமி! இப்போதுள்ள சிருஷ்டியில் யானை முதல் எறும்பீருகவுள்ள சகல பிராணிகளாலும், தேவர் முதல் மனிதரீருகவுள்ள சேதனர்களாலும், எத்தகைய ஆயுதங்களினாலும், நீராலும், நெருப்பாலும், காற்றாலும், மண்ணாலும், இரவிலும், பகலிலும் இறவாதிருக்கும் வரமே எனக்கு வேண்டியது. இவ்வரத்தைக் கொடுத்தருளும்" என்று கேட்டான். பிரம்மதேவர் அவ்வாறே வரங் கொடுத்து மறைந்தருளினார்.

ஹிரண்ய கசிபு வரம் பெற்றுத் திரும்பியதும் நாரதர் அவன் முன் தோன்றி இந்திரன் செய்த வஞ்சனையை வெளியிட்டுச் சென்றார். அசுரேந்திரன் தேவர்கோனைப் பிடித்துவந்து சிறைப்படுத்தினான்.

தக்க காலத்தில் லீலாவதி ஒரு புத்திரரத்தினத்தை

யீன்றெடுத்தாள். எங்கும் ஜெய பேரிகை முழங்கிற்று ; தேவர்கள் பூமழை பொழிந்தனர். முனிவர்கள் ஆசிகள் அளித்தனர். தானவர்கோன் பேரானந்த சாகரத்தில் மூழ்கினுன். செய்யவேண்டிய கிரியைகள் யாவற்றையும் குறைவறச் செய்தான். குலாசாரியரைக் கொண்டு தன் அருமந்த குழந்தைக்குப் "பிரகலாதன்" என்று திருநாமஞ் சூட்டினுன் ; தானதருமங்களை விசேஷமாக வழங்கினுன்.

பிரஹ்லாதன் பிறக்கும் பொழுதே மகா பக்திமானுக இருந்தான். ஸ்ரீ மகாவிஷ்ணுவி னிடத்தில் அவன் மனம் நிலைத்து விட்டது. எந்த நேரமும் அவரை எண்ணுவதும், புகழ்வதுமா யிருந்தான். பிரஹ்லாதன் தன் தாயின் கருவிலிருக்கும் போது நாரத முனிவர் தன்னுடைய மாதாவுக்குச் செய்த உபதேச மொழியைத் தானுந் தெரிந்துகொண்டவ னன்றே ? ஹிரண்ய கசிபுக்கு இப்படித் தன் பிள்ளை பக்திசெய்வது பிடிக்கவில்லை. அவனுக்கு எவ்வளவு ஞானமிருந்தாலும், தன் தமையனை ஸ்ரீ ஹரியானவர் கொன்ற காரணத்தாலும், சனகாதி யோகிகளின் சாபம் அவனுக்கிருந்ததாலும் அவன் ஹரியை வெறுத்து வந்தான். தனக்காகாத மகாவிஷ்ணுவைத் தன் பிள்ளை சர்வலோக சரண்யனுக எண்ணிப் பூஜித்து வருவது அடாத காரியமென்று அவன் புத்தியிற் பட்டது. உடனே அவன் பிரஹ்லாதனைத் தன் குலகுருவாகிய சுக்கிரா சாரியாரிடம் விட்டு அவனுக்கு நற்போதனை செய்ய வேண்டுமென்று வற்புறுத்தினுன். சுக்கிராசாரியார் பிரஹ்லாதனை அன்புடன் அருகிருத்தி,

இரணியனே யாவர்க்கும் ஈசனவன் நாமம்
தரணிமிசை யோதவிடர் தான்போம்—மரணமறும்

ஆதலா லோதுவாய் அத்திருநா மந்தன்னைக்
காதலா யுள்ளங் கனிந்து.

அப்பா! பிரஹ்லாதா! "ஹிரண்யாய நம:" வென்று சொல் என்றார் சுக்கிராசாரி. பிரஹ்லாதன் "இது வேத விருத்தம். வேதங்களும் வைதிகோத்தமரும் தொன்று தொட்டு ஆதியந்தமாக ஓதிவருவது எந்தப்பெயரோ அந்தப்பெயரை நாம் கைவிடுவது தருமமன்று. நமக்கு க்ஷேமமுண்டாக அதையே நாமும் சொல்ல வேண்டும். அது "ஓம் நமோ நாராயணாய" என்பதாம். அதனையே நானும் சொல்லுகிறேன்" என்று சொன்னான். இதைக் கேட்டகுருவானவர் தம்மாலியன்றவரை பிரஹ்லாதனுக்கு ஹரியின்மேல் வெறுப் புண்டாகும் வண்ணம் பல வழிகளாலும் முயற்சி செய்தார். தமது சிஷ்யருடன் சேர்ந்து வைத்து அவர்கள் மூலமாகவேனும் அந்தக் குழந்தை வழிக்கு வருமோ என்று பார்த்தார். ஒன்றாலும் பலனில்லாமற் போய் விட்டது. அவனோ ஹரியினிடத்தில் வெறுப்புக் கொள்ளுவதை விட்டு அவருடைய பெருமையை அவர்களுக்கு உபதேசிக்க ஆரம்பித்து விட்டான். ஒரு நாள் பிரஹ்லாதன் தன்னோடொத்த அசுரப் பிள்ளைகளைக் கூட்டி வைத்துக்கொண்டு ஹரிபக்தியைப் பற்றித் தெளிவாக எடுத்துப்பேசி அவர்களை நல்ல வழிக்குத் திருப்ப முயன்றான். இப்படிப் பிரஹ்லாதன் தான் பிடித்த பிடியை விடாதிருப்பதைக்கண்ட சுக்கிராசாரி, தானவர் கோனிடஞ் சென்று "ஐயா! தங்கள் குமாரன் நான் கற்பிப்பதை அனாதரித்து வேறொன்று சொல்லுகிறான்—அவன் சொல்லுவதை வெளியிட என் நாவானது அஞ்சுகின்றது; கேட்கச் செவி கூசுகின்றது; இன்னொரு

பிள்ளை அவ்வாறு சொன்னால் அவனை உடனே கொன்றிருப்பேன். தங்கள் குமாரனைது பற்றி, அதைத் தாங்களே விசாரிப்பது நலமென்று தங்களிடம் ஓடிவந்தேன்; என்ன செய்வேன்; நினைக்குந் தோறும் என் உடலும் பதைக்கின்றது'' என்றான். அரசன் ஆச்சரியமுற்று, சுக்கிராசாரியைப் பார்த்து, புன் முறுவல் கொண்டு “ஏ! பார்ப்பான்! என்ன நடுங்கிச் சாகிறாய். சிறு குழந்தை—இன்னும் சரிவர வார்த்தையாடத் தெரியாது. அக்குழந்தை என்னவோ இகழ்ந்து பேசியதாக அதன்மீது பெரிய வழக்கொன்றைத் தூக்கிக்கொண்டு வந்தாய். அப்படி தகாத பேச்சு அக்குழந்தை என்ன சொல்லிவிட்டதென்று கேட்டால் அதையும் வெளியிடப் பயப்படுகிறாய். இது வரையில் உன்னை நான் மிகவும் சமர்த்தனென்று மதித்திருந்தேன்—உனக்குச் சிறுபிள்ளைகளுக்குப் போதிக்கும் சக்தியில்லை யென்று இப்போதுதான் தெரிந்து கொண்டேன். நல்லது—விசாரிக்கிறேன்—நீ போ'' என்று குரு மூர்த்தியை அனுப்பி விட்டான்.

மறுநாள் இரண்யகசிபு கொலுமண்டபம் எய்தியதும், நவரத்னகஜிதமான சிங்காசனத்தினருகே சென்று, வழக்கம்போல்

“ என்றனுக் கோர் தெய்வமில்லை யானே தெய்வம்
என்குலமும் என்னரசும் என்றும் வாழி ”

என்று சொல்லி, அதன்மீது வீற்றிருந்து, முதன் மந்திரியை அழைத்து “மந்திரி! சீக்கிரம் சுக்கிராசாரியையும் நமது குழந்தை பிரஹ்லாதனையும் என் முன் வருமாறு செய்'' என்று ஆக்யாபித்தான். அவ்வண்ணமே இருவரும் வந்து சேர்ந்தனர். சுக்கிராசாரி அரசனை வாழ்த்திக்

கைகூப்பிய வண்ணம் ஒருபுறம் நின்றார். பிரஹ்லாதன்

விந்தையே எனவுரைக்க
மேதினியெல்லாம் ஆள் என்,
தந்தையே நினது பொற்றாள்
தலைமிசை கொண்டேன் அன்பாய்,
எந்தையே எனையிப் போதிங்
கேன் வரவழைத்தீர் என்றன்
சிந்தையே மகிழுமாறு
செப்பிட வணங்குகின்றேன்—

என்றான்.

உடனே வேந்தன் பிரஹ்லாதனை அணைத்தெடுத்து மடிமீது உட்காரவைத்து உச்சிமோந்து முத்தமிட்டு.

என்னருந் தவத்தில்வந்த இணையிலாப் பிரகலாதக்
கன்னலே கனிகற்கண்டே கண்மணியே யென்மைந்தா!
மன்னுமுன் ஆசான் சொன்ன வார்த்தையை மறுத்து நீதான்
என்னமோ விளம்பினையாம் யாததை விவரிப்பாயே—

அடா! என் அருந்தவச் செல்வமே! உன் வாத்தியார் உனக்கு என்ன சொல்லிக் கொடுக்கிறாரோ அதைத் தான் நீ சொல்ல வேண்டும்—அவ்வாறு சொல்லாமல் தகாத மொழி எதையோ நீ சாற்றினையாம்—நீ சொன்ன தென்ன—என்முன் சொல் பார்ப்போம்" என்று மிக்க அன்புடன் வினவினன்— (வரும்.)

"குணத்தை மாற்றக் குருவில்லை" என்று ஒரு பழமொழி வழங்குகிறது. ஆகையால் எப்பொழுதும் கெட்ட குணமுண்டாகும்படியான பழக்கவழக்கங்களுக்கு இடங்கொடுப்பது கூடாது.

"குக்கலைப் பிடித்து நாவிக் கூண்டினி லடைத்துவைத்து
மிக்கதோர் மஞ்சள்பூசி மிகுமணஞ் செய்தாலும் தான்
அக்குலம் வேற தாமோ அதனிடம் புனுகுண்டாமோ
குக்கலே குக்கலல்லால் குலந்தனில் பெரிய தாமோ?"

(விவேகசிந்தாமணி)

குக்கல்=நாய்; நாவி=புனுகுபூனை.

மேஷீத்திய சஞ்சிகைகளில் 144-வது பக்கம் பார்க்க.

கபிலை வாசகம்.

ஹாஸ்யம்.

கண் வைத்தியர்
Eye Doctor

உடுப்புடன் வெளியே போகப் புறப்பட்ட ஒரு கனவான் தன் அருகிலிருந்த சிநேகித ரொருவரைப் பார்த்து "என்ன ங்கோ ஸார் சில நாளாக என் கண்களே |துர்நீர் அடிக்கடி கப்பிக் கொண்டு பார்வையை மறைக்கிறது. தகுந்த வைத்தியம் உடனே செய்யவேண்டு மென்று பார்க்கிறேன். தக்க ஆசாமி அகப்படவில்லை. ஊரெங்கும் வைத்தியர் தான். பயமா யிருக்கிறது அவர்களிடம் பார்த்துக் கொள்ள. கண்ணல்லவா? அதனிலும் சிறந்த உறுப்பு வேறு எது? இந்த யோசனை எனக்குத் துணிவுண்டாக்க வில்லை என்ன செய்யலாம்" என்ருர்.

சிநேகிதர் அந்தக் கனவானை நோக்கி "இந்த அற்பகாரியத்திற்கா தாங்கள் பெருத்த யோசனை செய்கிறீர்கள். கையில் வெண்ணெயை வைத்துக்கொண்டு நெய்க் கழுவார்களேப்போ விருக்கிறது உங்கள் விவகாரம். நமது பக்கத்து வீட்டிலிருக்கும் வெங்கட்ட ராயரைத் தாங்கள் அறிய மாட்டீர்களா? வைத்தியத்தில் பிரசித்திபெற்றவ ராயிற்றே. கைவாசியுள்ளவர். கண் வயித்தியத்திலோ அவரைக் கடவுள் என்றே சொல்ல வேண்டும். கண்ணில்லாதவரைக் கண்ணில்லாதவராக்க அவர்தான் குரு. இந்தக்ஷணமே அவரை வரவழைக்கச் சொன்னல் நானே போய்க் கொண்டு வருகிறேன்" என்ருர்.

கனவான் "ஆமாம் ஸார், நானவரை யறிவேன். வைத்தியத்தில் பேர் போனவ ரென்று கேள்வி. அதனல் நான் அவரை விரும்ப வில்லை; பேருள்ளவ ரொருவரை எதிர் பார்த்துக்கொண் டிருக்கிறேன்" என்ருர்.

சிநேகிதர், "அப்படியா? பேர் போனவர் என்ருல் போழிந்தவர் என்று தாங்கள் அர்த்தம் பண்ணிக்கொண்டிருந்தீர்கள். அது தப்பு ஸார். பிரக்யாதி பெற்றவரைப் பேர்போனவர் என்று பெரியோர்கள் பேசுகின்றனர். ஆகவே வயித்தி

யத்தில் அவர் பேர் போனவரென்பது பிரசித்தி யடைந்தவர் என்பது தான். இந்த விஷயத்தில் தாங்கள் சந்தேகப்பட வேண்டாம். அவர் வேலைப்பாடெல்லாம் வெளியூரிலாதலால் தங்களுக்கு அது தெரியாது போலும்" என்றார்.

கனவான் "அவ்வாறாயின், அவரை அழைத்து வாரும்—பார்க்கலாம். நான் வெளியே போக வேண்டும். நேரமாகிறது" என்றார். சிநேகிதர் வயித்தியரைக் கூப்பிட்டுவரச் சென்றார். வயித்தியரும் வந்து சேர்ந்தார். இதற்குள் கனவான், தாம் உட்கார்ந்திருந்த நாற்காலியில் தமது வலதுகாலைத் தூக்கி வைத்துக்கொண்டு முழங்கால் மடிப்பில் தலைப்பாகையைக் கழற்றி மாட்டி வைத்திருந்தார்.

வந்த வயித்தியர் தன்னை அழைத்து வந்தவரைப் பார்த்து, "ஐயா! அதோ! நம் எதிரில் நாற்காலியில் தலைப்பாகை யில்லாமல் உட்கார்ந் திருக்கிறாரே, அந்த எஜமானுக்கா? அல்லது அவர் மடியில் தலைப்பாகை மாட்டிக்கொண்டு உட்கார்ந்திருக்கிறாரே அந்தச் சின்ன எஜமானுக்கா? இப்போது வயித்தியம் பார்க்கவேண்டியது" என்று கேட்டார். இந்தப் பேச்சு அந்தக் கனவான் காதில் விழுந்தது. அவர் "என்னடா இவன் நம் மொருத்தனையே இரண்டு பேரென்று பேசுகிறானே. ஒரு வேளை இவனுக்கே கண் தோஷம் உண்டு போலும். இந்தக் குருட்டு வயித்தியன் நமது கண்ணுக்கு என்ன சிகிச்சை செய்யப் போகிறான்? போதும், போதும் இவன் வயித்தியம்" என்று தமக்குள் நினைத்து "ஐயா! வைத்தியரே! உமது வல்லமையை நேரில் அறிந்து கொண்டேன், மற்றொரு சமயம் பார்க்கலாம், போய் வாரும்" என்று விடையளித்துத் தமது வேலையைக் கவனிக்கலானார். "வீழ்வார்க்கு வீழ்வார் ஒரு போதும் துணையாகார்" என்பதை நாம் இதனால் அறியலாகும்.

ஒருகுடம் பாலில் ஒருதுளி நீர்விழுந்தால் அந்த நீர்த் துளி பாலின் குணத்தைப் பெறுவது காண்கிறோம். ஒருகுடம் நீரில் ஒருதுளி பால்விழுந்தாலும் பால் நீரின் குணத்தைப் பெறுவது காண்கிறோம். இது வஸ்துக்களுக்குள்ள சுபாவம். ஆகையினாலேதான், ஔவைப்பிராட்டியார் "சேரிடமறிந்து சேர்" "இணக்கமறிந்திணங்கு" என்று கட்டளை பிறப்பித்தனர்.

அன்றுதளித்தான் மூலிகை

அல்லது

கெடுவான் கேடுநினைப்பான்

ஒருகாலத்தில் மூலிகைகளின் பெருமை மிகவும் பெரிதாயிருந்தது. மூலிகையின் மகிமையால் அனேகர் பசி தாகம் முதலியவை இல்லாமலே நெடுநாள் சுக ஜீவியராய் வாழ்ந்துவந்தனர்; சிலர் வஜ்ஜிர சரீரம்பெற்று ஒருவித நோயுமின்றிச் சஞ்சரித்துவந்தனர்; மாற்றுயர்ந்த பொன்செய்து சிலர் ஜீவித்து வந்தனர்; நீங்காத வியாதிகளை நீக்கி அதனால் சிலர் பிழைத்து வந்தனர்; இப்படி மூலிகைகளைக்கொண்டு அனேக அற்புதங்களைச் செய்து அனேகம்பேர் பேரும் சீரும் பெற்றுவந்தனர். ஆனால் அப்படிப்பட்ட மகத்துவங்கள் இப்போது அருமையாயிருக்கின்றன. காலபேதத்தால் மூலிகைகளின் சத்தும் குறைந்துவிட்டது. இதற்குக் காரணம், தருமநெறியானது நாளுக்குநாள் தனது யதார்த்த நிலையிலிருந்தும் மாறுபாடடைந்துகொண்டே வருவதுதான் என்று பெரியோர் கூறுகின்றனர். இது ஒரு புறம் இருக்கட்டும்.

'அன்று தளித்தான்' மூலிகையின் சகாயத்தால் யாதவனொருவன் மேன்மையடைந்த சிறுகதை ஒன்று சொல்லுகிறேன் கேளுங்கள்.

செஞ்சிமா நகரத்தைப்பற்றி நீங்கள் கேள்வியுற்றிருக்கலாம். அது முன்னொரு சமயம் தேசிங்கு ராஜனால் ஆளப்பட்டு வந்தது. அந்த நகரத்தைச் சார்ந்த முல்லை நிலம் அப்போது மெத்தவும் செழிப்புற்றிருந்தது. காடும் காட்டைச்சார்ந்த இடமும் முல்லை நிலம் எனப்படும். இது யாதவர்களுக்கு உரியதாயிருந்தது. அவர்கள் தங்கள் கால் நடைகளை விருத்தி செய்து பரிபாலித்து வருவதற்கு அந்த இடந்தான் அவர்களுக்குச் சௌகரியமானது.

யாதவமரபில் வந்த மாதவக்கோனூர் என்பவன் மேற்சொன்ன முல்லை நிலத்தில் தன் பசுக்குலங்களைப்பாது காத்துக்கொண்டு வந்திருந்தான். அப்போது ஒருநாள், முனிவரொருவர் அங்கே வந்தார். அவரைக்கண்டதும் மாதவப்பிள்ளை சாஷ்டாங்கமாகத் தரையில் விழுந்து பணிந்தான். முனிவர் அவனை ஆசீர்வதித்து "தம்பீ! நீ இந்த இடத்தில் நெடுநாள் வசித்துக்கொண்டு வருகிறபடியால் இக் காட்டுப் பக்கங்களில் அநேக மூலிகைகளை நீ கண்டிருக்கலாம் அல்லவா?" என்று கேட்டார். அதற்கவன் "ஆம்" என்றான். அப்படியானால் "அன்று தளிர்த்தான்' மூலிகையையும் நீ பார்த்திருக்கலாமே" என்று வினவினார். மாதவப்பிள்ளை "பார்த்திருக்கிறேன்" என்றான். "அதன் குணமென்ன?" என்றார் முனிவர், "ஐயா! அந்த மூலிகையைக் கிள்ளினாலும் அறுத்தாலும், மழைகாலமாயிருந்தால், அது மறுநாளே முன்னிருந்ததுபோல் தழைத்து விடும்; மற்றகாலத்தில் உலர்ந்து போய் வேர்மாத்திரம் இருக்கும்" என்று சொன்னான். மாதவன். "நீ சொல்வது நிரம்பவும் சரி. அந்த மூலி

கையைப் பார்க்கவேண்டுமென்று அனேக நாளாய் அனேக இடங்களில் திரிந்துவருகிறேன்; காணக்கூடவில்லை. என் மனம் சந்தோஷிக்கும்படி நீ இப்போது அம்மூலிகையின் இருப்பிடத்தை யறிந்துள்ளதாகத் தெரிவித்தாய்; அதை நீ தயவுசெய்து எனக்குக்காட்டவேண்டும். உனக்குப் புண்ணியமுண்டு'' என்று தபசியானவர் மாதவனை வேண்டிக்கொண்டார்.

மாதவப்பிள்ளை "சுவாமிகளே! இதற்காக என்னை ஏன் மிகவும் வேண்டுகிறீர்? இது ஒரு பெரியகாரியமா? தெரிந்தவர் காட்டிலுள்ள செடியைக் காண்பிக்கவும் பின் வாங்குவரா? என் பின்னேவாரும் காட்டுகிறேன்'' என்று முனிவரை அழைத்துக்கொண்டு கொஞ்ச தூரம்போய் அங்கோரிடத்திலிருந்த அந்தச் செடியைக் காண்பித்தான். முனிவர் அதனைக்கண்டதும் 'கும்பிடப்போன தெய்வங்குறுக்கிட்டது' என்று குதூகலமடைந்து, அதன் நுனியொன்றைக்கிள்ளி, அது அடுத்த நாள் தழைக்கக் கண்டு ஆச்சரியமுற்று அதனருகிலேயே ஒருபுறம் வசிக்கலாயினர். முனிவர் அடிக்கடி மாதவப்பிள்ளையைப் பார்த்து "அப்பா! நீ இந்த மூலிகையைத் தினந்தோறும் அதி ஜாக்கிரதையாகப் பாதுகாத்துவா! பிறகு அதன் பிரயோசனத்தை உனக்குத் தெரிவிக்கிறேன்'' என்று சொல்லிவந்தார். அத்துடன் தானும் அதனிடம் நாள்தோறும் சென்று பிரதக்ஷணம் புரிந்து, ஸ்ரீ கிருஷ்ண மந்திரத்தை யுச்சரித்து, தூபதீப நிவேதனம் செய்து, ஓமம் வளர்த்தி, வணங்கி வந்தார்.

சில நாள் கழிந்ததும், ஒரு நாள் முனிவர் மாதவப்பிள்ளையை அழைத்து, "தம்பீ! நீ இம்மூலிகையை நாற்

புறமும் தீயிட்டுக்கொளுத்தி, பசுவின் நெய்யை அதில் ஏராளமாய்ப் பெய்து எரிகிற ஓம குண்டத்தை வலமிட மாக வந்து சேவித்துக்கொள்'' என்று கட்டளையிட்டார். அவனும் அவ்விதமே செய்தான். அப்படி அவன் வலம் வரும்போது முனிவர் அவனை அதில் தள்ள முயன்றார். இச்சூதைக்கண்ட மாதவன் "அப்படியா சங்கதி" என்று தனக்குள் நினைத்து, முரட்டு ஆசாமியா யிருந்தபடியால், உடனே அந்த முனிவரைக் கெட்டியாகப்பிடித்துத் தூக்கி அந்த ஓம குண்டத்தில் போட்டு விட்டுச் சரேலென்று தன் வீடுபோய்ச் சேர்ந்து, நடந்த விருத்தாந்தத்தைத் தன் பெற்றோருக் கறிவித்தான்.

அவர்கள் இதைக்கேட்டுத் திடுக்கிட்டு, "ஐயோ! மகனே! என்ன வேலைசெய்தாய். பெரியவர்களை இப்படியும் செய்யலாமா? அவர்கள் சாபமிட்டால் நாம் அடியோடு நாசமாய்விடுவோமே'' என்று சொல்லி அந்த இடத்துக்கு ஓடிவந்தார்கள். வந்து பார்க்கும்போது ஓமகுண்டத்தில் முனிவர் கோடிசூரியப் பிரகாசம்போல் ஒளிவீசிக்கொண்டு, ஆயிரத்தெட்டு மாற்றுயர்ந்த பசும் பொன் பிம்பமாக விளங்குவதைக் கண்டார்கள். முனிவர் இப்படித் தங்கவிக்கிரகமாக மாறினதைச் சோதிக்க அந்த விக்கிரகத்தின் அவயவத்தில் ஒரு சிறு பாகத்தை வெட்டியெடுத்துக் கொண்டுபோய் விற்பனைசெய்ய, அது நல்ல விலையாயிற்று. இதனால் அவர்கள் கஷ்டமில்லாமலே தங்கள் ஜீவனத்தை நடத்தலானார்கள். வர வர, அந்த விக்கிரகத்தின் மற்றபாகங்களையும் எடுத்து விற்று, பெருத்த தனவந்தராய் மாடமாளிகை முதலிய வசதிகளை யேற்படுத்திக்கொண்டு, சத்விஷயமான தர்மபரிபாலனத்தையும் நடத்திவந்தார்கள்.

விக்கிரகமோ தன்னை எவ்வளவு வெட்டியபோதும் தான் மறுநாளே பழயபடி விளங்கிவந்தது. இது அந்த "அன்று தளிர்த்தான்" மூலிகையின் மகத்துவமென்று அந்த யாதவர்கள் தெரிந்துகொண்டார்கள். இப்படி உயர்வடைந்த அந்த யாதவர்கள் ஜெயசிங்கு என்னும் அரசனையடைந்து அவனிடத்தில் தங்கள் அருமையான புத்திரனாகிய திருவேங்கடம் என்பவனை மந்திரியாக அமர்த்தினர். இந்தவைபவத்தை "நந்தமண்டல சதகம்"

"அன்று தளிர்த்திடு மூலிகை காட்ட அறிந்துமகய்
நன்றுறச் செய்ததில் வீழ்த்துந்தவனை நனிவிழச்செய்
தொன்றுபொன் னாக வதைச்செஞ்சி மன்னற் குவந்துநல்கும்
வன்றிறல் மாதவக்கோன்வாழ்ந் ததுநந்த மண்டலமே"

என்று பேசுகின்றது.

இக்கதையால் நாம் தெரிந்து கொண்டதாவது:—

(1) மூலிகையின் பெருமை மிகவும் பெரிதென்பதும், (2) "அன்று தளிர்த்தான்" மூலிகையை ஓமயாசஞ்செய்து அதில் வீழ்த்தப்படுவோன் பொன் விக்கிரகமாகிப் பிறர்க்குப் பயன்பட்டு வந்தும், அந்த விக்கிரகம் பழையபடியே கெடாது விளங்கும் என்பதும், (3) தன்னைக்கெடுக்க எண்ணிய முனிவன் தானே கேடுண்டமையால், 'கேடுவான்கேடு நினைப்பான்' என்னும் பழமொழி உண்மை என்பதும் ஆம்.

முக்கிய கருத்து—எந்த விஷயத்திலும் நாம் சுயநலங் கருதிப் பிறர்க்குத் தீங்கு நாடக்கூடாது. அப்படி நாடினால் அது நமக்கே கெடுதியாக முடியும். இதை நாம் எப்போதும் ஞாபகத்தில் வைத்திருக்கவேண்டுமென்பது.

அடக்கமே அனைவர்க்கும் அணிகலன். அடக்கமில்லாதவன் படிப்பு பயன்படாது. எனெனில், நூல்களைக் கற்று அவைபோதிக்கும் வழியில் நின்று அடங்கி நடத்தலே கல்விமானுக் கழகென்று கூறியிருக்கிறார்கள். ஆகையால், நூல்களைப்படித்து அவற்றின் பயன் உணர்ந்து அவற்றை மற்றவர்களுக்கு உபதேசித்தாலும் தான் [illegible] வழி நடக்காமற் போனால் அவ[illegible]மில்லை என்று தெரிந்துகொள்[illegible]கள்.

186454

ஹாஸ்யம்.

முன்னொரு காலத்தில் தெலுங்குவித்வா னொருவர் மகா ராஜாவின் சமஸ்தானத்தை நாடிச் சென்றார். அந்த சமஸ்தா னத்து வித்வான் அவரை நோக்கி "வந்த காரணம் என்ன ?" வென்று கேட்டார். "மகா ராஜா அவர்கள் மீது கவிபாடிப் பரிசு பெற்றுப் போகவந்தேன்" என்று தெலுங்கு வித்வான் சொன்னார்—சபை கூடியதும், ஆஸ்தான பண்டிதர் தெலுங்கு வித்வானை நோக்கி "உமது கவியைச் சொல்லும் என்றார். உடனே தெலுங்கு வித்வான்,

"எர் ரன்ன எர் ரன்ன எமி எர் ரன்ன
கண் லு எர் ரன்ன காவிராய் எர் ரன்ன
குருபிஞ்சி எர்ரன்ன குட்லு எர்ரன்ன"

என்று பாடினார்.

ஆஸ்தான பண்டிதர் இந்தப் பாடலைத் தமதுதலையை ஆட் டிக்கொண்டே பலதரம் சொல்லச் சொல்லி ஆனந்தத்தால் தேகம் பூரித்தவராய், "பேஷ்—பேஷ்—பல பேஷாக இருக்கி றது. இதைப்பாடிய இவருக்கு சொர்ண புஷ்பம் சமர்ப்பியும்" என்று மகாராஜாவுக்குத் தெரிவித்தார். அவ்வாறே அவருக்கு ஐந்நூறு ரூபா வெகுமதி செய்யப் பட்டது. அதைப் பெற்றுக் கொண்டு தெலுங்கு வித்வான் இன்று நாம் நரிமுகத்தில் விழித் தோம். பகவான் இந்தப் பரிசை நமக்களித்தார் என்று சந் தோஷ மிகுந்து, கடைவீதியிற் சென்று ஸ்நான பலகாரபோஜ னாதிகளுக்கு வேண்டிய வஸ்துக்களை ஏராளமாக வாங்கிக்கொ ண்டு, வீட்டுக்குப் போய் போஜனந் தயார் செய்து விட்டு, எண்ணெ யிட்டுக்கொண்டு ஸ்நானஞ் செய்து, பூஜை முடித்துக் கொண்டு போஜனஞ் செய்யச் சித்தமா யிருந்தார்—

தெலுங்கு வித்வான் ராஜசபையை விட்டு நீங்கியதும் ஆஸ்தான பண்டிதர் அவர் பாடலை மறுபடியுங் கவனித்தார். கவனித்ததும் முகத்தைச் சுளித்துக்கொண்டு கையையுங் காலை யும் உதறிக் கொண்டு விசனப் பட்டார். மகாராஜா என்ன சமா சாரம்?" என்று கேட்டார்.

" மகாப்பிரபுவே ! இப்போது வந்த வித்வான் பாடிய பாடலில் விஷ எழுத்து சேர்ந்திருக்கிறது. கண்களும் சிவப்பு, காவிககல்லுஞ் சிவப்பு, குண்டுமணியுஞ் சிவப்பு, கோழி முட்டையுஞ் சிவப்பு " என்று நமது தேசத்தை லக்ஷ்மீகரம் பொருந்திய தென்று பாடியது நல்லதே. ஆனல் குண்டு மணியைச் சிவப்பு என்று அதிலுள்ள கருப்பைப் பாராமல் சொன்னதுதான் பெரியதவறு. அதனல் நமது தேசத்துக்குக் கெடுதிவரும்-நானும் அவசரப்பட்டு, சரி என்று சொல்லி வெகுமானம் கொடுக்க அநுமதி தந்தேன். இப்பொழுது என்ன செய்கிறதென்று வருத்தப்படுகிறேன்" என்ருர்.

உடனே அரசன் தூதரை விட்டு அந்தத் தெலுங்கு வித்வானை வரவழைத்தார். தூதர்கள் போகும் போது வித்வான், ஆனந்தமாய் சாப்பிட உட்கார்ந்தார். சேவகர்களைக் கண்டதும் பயந்து, " என்னமோ ஆபத்து நேர்ந்தது போல் காணப்படுகிறதே. " கைக்கெட்டியது வாய்க் கெட்டவில்லை" போலும் என்று சிந்தித்தார். சேவகர் அவரைக் கையும் பிடியுமாய்ப் பிடித்துக் கொண்டு ராஜ சபைமுன் கொண்டு வந்தார்கள். ஆஸ்தான பண்டிதர் அவரைப் பார்த்து " நீர் பாடியபாட்டில் குண்டுமணி சிவப்பு என்றது தப்பல்லவா? அதில் கருநிறம் இருக்கிறதே அதற்கென்ன சொல்லுகிறீர்?" என்று கேட்டார். வித்வான் தைரியம் பண்ணிக் கொண்டு, வந்தது வரட்டும் என்று துணிந்து " ஸ்வாமி! அந்தப் பாடலில் காவிக்கல்லை நுழைத்திருக்கிறது எதற்காக வென்ருல் சிவப்புக்கு மாருன நிறம் ஏதாவது பாட்டில் வந்து விட்டால், காவிக் கல்லைக் கொஞ்சம் ஜலம் விட்டுக் குழைத்துப் பூசி எல்லாவற்றையும் சிவப்பு நிற மாக்கிக் கொள்வதற்கே-வீணுக் கல்ல " என்ருர்.

" இப்போது சரி. இந்த யோசனை என் புத்திக்குப்படாமற் போயிற்று. இவர் மகா வித்வானே. இவருக்கு இன்னும் அதிகப்படி பரிசு கொடுத்துப் போகவிடும் " என்று அரசனுக்குச் சொல்ல, அரசன் அவ்விதமே செய்ய, வித்வான் "நாம் நரிமுகத்தில்தான் விழித்தோம்" என்று சந்தோஷித்துப் போனர்.

அரசனும் அவன் சேவகனும்

அவந்திபுரம் என்கிற ஒரு திருநகரத்தில் அமரசிம்மன் என்ருெரு அரசனிருந்து நீதிதவருமல் அரசுபுரிந்து வந்தான். அவன் ஒருசமயம் தனக்குக்கிடைத்த ஒரு வெற்றிக்கடையாளமாகத் தன் பிரஜைகளெல்லோருக்கும் ஒரு பெரிய விருந்து செய்வித்தான்; இந்த விருந்து நடக்கையில் தானே நேரில்வந்து பந்திவிசாரணே செய்து, யார் எதை விரும்புகிருர்களோ அதைத் திருப்திகரமாய்ப் பரிமாறும்படி செய்துகொண்டிருந்தான். இச்சமயம் அந்த விருந்துக்கூட்டத்துக்கு ஒருவன்வந்து, அரசனே வணங்கினுன். அரசன் அவனேப்பார்த்து, "நீயார், விருந்துக்கு வந்தவனு?" என்று விசாரித்தான். அவன், "பிரபுவே! நான் சிங்கத்தைப் பிடித்தாட்டும் மல்லகசெட்டி, வில்வித்தையில் சமர்த்தன்! என்னைக் கலியுக அர்ஜுனனென்று சொல்லுவார்கள். நான் குறி பார்த்துவிடும் பாணங்கள் கல்லேயும் துளேத்துக்கொண்டு அப்பாற் போகும். இவையன்றி எனக்கு அநேக சாஸ்திரங்களும் வித்தைகளும் அரியபல இரகசியங்களும் தெரியும். நான்விஜயவிக்ரமனென்கிற அரசனிடம் முன்சேவகம் பண்ணினேன். அவர் என் வல்லமைகளே உணர்ந்து என்னேத்தக்கபடி நடத்தாமல் இழிவுக்குள்ளாக்கினுர். அதனுல் அந்தச் சேவகத்தை விட்டு இந்தச்சமுகம் நாடி வந்தேன்" என்ருன்.

இதைக்கேட்ட அரசன், "நல்லது, அப்படியா! கவலைப்படவேண்டாம்" என்று கூறித் தன் மந்திரியை அழைத்து, "இவனுக்கு நம்மரண்மனையில் ஏதேனும் ஒரு வேலை கொடுத்து நாளை முதல் அதைப்பார்த்து வரும்படி செய்யும்" என்று கட்டளையிட்டான். மந்திரி "உத்தரவின்படியே செய்கிறேன்" என்று கூறி, அந்த மல்லகசெட்டியை அழைத்து, "உனக்கு அரண்மனை வாசல் காவல் தொழில் கொடுத்திருக்கிறது. அதை நீ நாளை முதல் பார்த்துவா?" என்றுத்தரவிட்டனுப்பினர். பிறகு விருந்து முடிந்து எல்லோரும் தத்தம் இருப்பிடத்துக்குச் சென்றூர்கள்.

அந்த மல்லகசெட்டி அடுத்த நாளே இந்த வேலையை ஒப்புக்கொண்டு ஒழுங்காய்க் காவல்புரிந்து வந்தான். அவன் இரவில் எல்லோரும் நித்திரை செய்தபின் அரண்மனை முன்வாயலிற்போய் அரண்மனையை நோக்கியபடி ஒற்றைக்காலில் நின்றுகொண்டு காவல் புரிந்து வந்தான். இப்படியிருக்கையில் ஒரு நாள், அரசன் ஏதோ காரணத்தினுல் பாதிராத்திரியில் விழித்துக்கொண்டு படுக்கையைவிட்டெழுந்து மேல்மாடிக்குப்போய் உலாவிக்கொண்டிருந்தான். அப்பொழுது அவன் ஒற்றைக்காலில் நின்றுகொண்டிருக்கும் அந்த மல்லகசெட்டியைப் பார்த்து, "இது யார் இப்படி இங்கே ஒற்றைக்காலில் நிற்பது" என்றெண்ணி, அவனைக் கூப்பிட்டு மேல்மாடிக்கு வரவழைத்துப் பார்த்து, "ஓ அன்றுவந்த மல்லகசெட்டியா? நீ யேன் இப்படி ஒற்றைக்காலில் நிற்கிறுய்? காரணமென்ன?" என்று கேட்டான்.

சேவகன், "பிரபுவே! மகாராஜாவைத் தனித்த

இடத்தில் கண்டு தரிசிக்கவேண்டுமென்கிற விருப்பமிருந்தது. அதன்பொருட்டுத் தவமிருந்தேன். தவத்திற்குப் பயனாகத் தமது தரிசனம் இப்போது தனித்த இடத்திற் கிடைத்துவிட்டது. இனி எனக்கு ஒரு குறைவுமில்லை. செல்வசம்பத்தோடு வாழ்ந்துவருவேன்" என்று புத்தி சாலித்தனமாகப் பதிற்சொன்னான். புத்திசாலிகள் இவ்வாறு சமயோசிதமாகப்பேசித் தங்கள் காரியத்தில் சித்தி பெறுவார்கள். இவ்வாறு சொன்னவுடன் அரசன் மனமகிழ்ச்சியடைந்து வேறுபேசுவதற்குள், "நான் போகிறேன், என்னை மறுபடியுந் திரும்பிவரச்செய்கிறவன் யாவன்?" என்று யாரோ கொஞ்சதூரத்திலிருந்த ஒரு பூம்பொழிலிற் பேசுவது நன்றாய்க் கேட்டது. இதைக் கேட்டதும் அரசன் சேவகனைநோக்கி, இந்தச்சத்தத்தை நான் இரவில் இதற்குமுன் இரண்டு மூன்று நாள் கேட்டேன். இப்படிச் சொல்வது யார்? இவ்வாறு பேசுவதேன்? என்று அறிய எண்ணமுண்டு. யாரோ நமக்கென்ன என்று இருந்துவிட்டேன். இன்று இதனையறிய எண்ணமுண்டாகிறது" என்றான்.

சேவகன், "பிரபுவே! எனக்கு உத்தரவிட்டால் நான்போய் இப்பொழுதே அறிந்துவருகிறேன்" என்று சொன்னான். அரசன் 'ஆனால் போய்வா!" என, சேவகன் உடனே புறப்பட்டு அந்தப் பொழிலைநோக்கி நடந்தான். அரசனும் ஒரு கம்பளியை எடுத்துத் தன் தேகந் தெரியாமற் போர்த்துக்கொண்டு மாடியிலிருந்து மளமளவென்றிரங்கிச் சேவகனைத் தொடர்ந்துசென்றான். இவ்வாறு சென்ற இவர்கள் ஒருவரை ஒருவர் அறியாமல் அந்தப் பொழிலுக்குப் போய்ச் சேர்ந்தார்கள். அங்குச்

சென்றதும் அரசன் ஒரு மாத்தினடியில் பதுங்கிக்கொண்டான். அப்பொழுது "நான் போகிறேன் என்னை மறுபடியும் திரும்பிவரச்செய்பவன் யாவன்? என்று சொல்வது அருகேகேட்டது. சேவகன் அங்கே சென்றான். அங்கு ஒரு மாது நின்றுகொண்டிருக்கக்கண்டு "மாதே நீ யார்? இந்த நடுச்சாமநேரத்தில் இந்தப் பூம்பொழிலில் தனியே யிருந்துகொண்டு இவ்வாறு சொல்வதன் காரணமென்ன?" என்று கேட்டான்.

அந்த மாது, "நான் இந்நகர அரசனுக்கு உயிர்க்கு அடையாளமாயிருக்கிறேன். நானிருக்கவேண்டியகாலம் முடிந்துவிட்டது. இனி நான் பிரிந்துபோகவேண்டியவள். அதனைத் தெரிவித்தேன்" என்றாள். இதைக் கேட்டதும் சேவகன் திடுக்கிட்டானாயினும் தைர்யஸ்தனாகையினால், அந்த மாதைப்பார்த்து, "மகாராஜாவினுயிர் இன்னும் சிலகாலம் தரித்திருக்கவேண்டுமாயின் என்ன செய்ய வேண்டும்? என்று கேட்டான். அந்தமாது, "அரசன் உயிரோடிருக்கவேண்டுமானால், உன் மகனைக் கொண்டு வந்து எனக்குப் பலிகொடுத்தாகவேண்டும். இதனையன்றி வேறுவழியில்லை" என்றாள். சேவகன் கேட்டதும் சந்தோஷமடைந்து, "அப்படியானால் நல்லது, உடனே என் மகனை இங்குக் கொண்டுவந்து பலிகொடுத்து அரசனுடைய உயிரை மீட்கிறேன்" என்மீது கிருபைகூர்ந்து நான் வீட்டுக்குப்போய் என் மகனைக் கூட்டிக்கொண்டு இவ்விடம் வரும்வரையில் இங்கேயே இருக்கவேண்டும்" என்று வேண்டிக்கொண்டு உடனே தன் வீட்டுக்கோடி வந்து தூங்குகிற மகனையும் மனைவியையும் எழுப்பிச் செய்தியைச் சொன்னான்.

சேவகனுடைய மகன் நல்ல புத்திசாலி; படித்தவன். உலகஞானம் கைவந்தவன். ஆகையினால் அவன் தன் தந்தையினுடைய இந்த மொழியைக் கேட்டதும், மனமகிழ்ச்சியோடு எழுந்து நின்று தந்தையைப்பணிந்து "பரோபகாரத்தின் பொருட்டு என் தேகத்தைக் கொடுக்க இன்று சமயம் வாய்த்ததுபற்றி நான் சந்தோஷப்படுகிறேன். இப்படிப்பட்ட சமயம் வாய்ப்பதரிது. கிடைத்த சமயத்தை இழப்பவன் புத்திசாலியாகமாட்டான். மானிடர்க்குப் பரோபகாரத்தைப்போல் புண்ணியந்தருவது ஒன்றுமில்லை. அதுவும் நீதிநெறிதவறாத அரசன் பொருட்டுச் செய்ய நமக்குப் பாக்கிய மிருக்கவேண்டாமா? நானிந்தப் புவியிலிருந்து என்ன செய்யப்போகிறேன். மகா நீதிமானாகிய அரசனுயிரோடிருந்தால் குடிகளுக்குச் சௌக்கியமுண்டாகும். நீதிமானான அரசனுக்காகக் குடிகளில் ஒருவனையேனும் மந்திரிகளுள் ஒருவனையேனும் பலியிடுவது பாதகமாகாது. அரசன் தேசமுழுவதையும் காப்பவனல்லவா? நீதியரசன் இறந்து வேறொரு வேந்தன் வந்து அரசுபுரிவானானால், நாடு காடாகும்; வீடு மேடாகும்; குடிகளும் நொந்து மெலிந்து சங்கடப்படுவார்கள். ஆகையினால் சிறிதும் ஆலோசியாமல் இப்பொழுதே என்னை அங்கே அழைத்துக்கொண்டுபோய்ப் பலி கொடுங்கள்" என்றான். அவன் தாயும் புண்ணிய பாவமுணர்ந்த உத்தமியாகையினால் மகனை அனுப்ப இணங்கித் தன்னை வணங்கிய மகனுக்கு மனமகிழ்ச்சியோடு விடைதந்தாள்.

அப்பால் சேவகன் தன் மகனைப் பெருமகிழ்ச்சியோடு பூம்பொழிலுக்கு அழைத்துச் சென்றான். பூம்

பொழிலில் சாயாதேவி பரிபூரணமான கிருபையோடு காத்துக்கொண்டிருந்தாள். இவர்கள் அங்கே சென்றதும் அந்தத் தேவியை வலம் வந்து பணிந்தார்கள். சேவகன் தேவியின்முன் தன் மகனைக் குனியவைத்துத் தன் கை வாளால் வெட்டப்போனான். தேவி உடனே அவன் கரத்தைப் பிடித்துக்கொண்டு, "நில்லு! நில்லு! உன்னுடைய மனப்பூர்வமான இந்தச் செய்கைக்கும் உன் மகனுடைய பரிசுத்தமான மனநிலைமைக்கும் கடவுள் மகிழ்ந்து உங்களுடைய அரசனுக்கு இன்னும் அறுபதுவருஷ ஆயுளைக் கொடுத்திருக்கிறார். கவலை வேண்டாம்" என்று கூறி மறைந்துவிட்டாள். சேவகனும் மகனும் இதைக்கேட்டதும் மனம் பூரித்துக் கடவுளைத் துதித்துக்கொண்டே தங்கள் வீட்டுக்குத் திரும்பினார்கள்.

இங்கு இவ்வாறு நடந்தவைகளையெல்லாம் மரத்தடியில் பதுங்கியிருந்து பார்த்துக்கொண்டிருந்த அரசன் அங்கிருந்து புறப்பட்டு வெகு வேகமாய் நடந்து அவர்களுக்குமுன் அரண்மனைபோய்ச் சேர்ந்து முன்போல் மேல் மாடியில் உலாவிக்கொண்டிருந்தான். அரசன் போய்ச் சேர்ந்த கால்மணி நேரத்திற்கப்பால் சேவகனும் அவன் மகனும் அரசனிடம் போய்ப் பணிந்து நின்றார்கள். அரசன், ஒன்றுந் தெரியாதவன்போ லிருந்தான். சேவகன் நடந்தவைகளையெல்லாம் சிறிதும் தவறாமல் சொன்னான். அரசன், சேவகனையும் அவன் மகனையும் கட்டித் தழுவிக்கொண்டு, என்னுயிரைத் தந்த தைரியசாலிகளாகிய உங்களுக்கு நான் என்ன கைம்மாறு செய்யப்போகிறேன். ஈசன் உங்களிடத்திலென்று மிருந்து உங்களுக்கொருவிதமான இடையூறும் வராமல் காப்பாற்றி இம்

மைப் பயனையும் மறுமைப் பயனையும் தருவான்" என்று வாழ்த்தினன். சேவகனைத் தொடர்ந்து பொழிலுக்குப் போனதையும் அங்குத் தான் மரத்தினடியிற் பதுங்கியிருந்து எல்லாவற்றையும் பார்த்துக்கொண் டிருந்ததையும் விவரமாகச் சொல்லி, "என் ஆருயிர் நண்பர்களே! நீங்கள் இனி என் அமைச்சர்கள். இந்த அரசு உங்களுடைய அதிகாரத்திற் கடங்கியது" என்று கூறி விடை கொடுத்தனுப்பி மறுநாள் சபை கூட்டி எல்லோரையும் வரவழைத்து நடந்தவைகளைத் தெரிவித்து, மல்லகசெட்டியைத் தனக்குப் பிரதிநிதியாக்கி அவன் மகனைத் தன் மகனுடைய காரியதரிசியாக உயர்த்திக் கௌரவித்தான்.

பிள்ளைகளே!—உயர்ந்த குணங்களே உயர்வைத் தருமாதலால் அவற்றை எக்காலத்திலும் எந்தச் சமயத்திலும் கைவிடுவதுகூடாது. உயர்ந்த குணமாகிய துணைவனிருக்கிற வரையில் ஒருவன் எதற்கு மஞ்சவேண்டுவதில்லை. அவன் முன் எல்லா நன்மைகளும் தாண்டவமிடும்.

துஷ்டனை நல்லவனென்றெண்ணி அவனைத் துணை கொள்வதிப்படியென விளங்குவது—

"சான்றோ ரெனமதித்துச் சார்ந்தாய்மற் சார்ந்தாய்க்குச்
சான்றாண்மை சார்ந்தார்க ணில்லாயிற்—சார்ந்தோய்கேள்
சாந்தகத் துண்டென்று செப்புத் திறந்தொருவன்
பாம்பகத்துக் கண்ட துடைத்து" (நாலடியார்)

* இ-ள். சான்றோரென—மேலோரென்று, மதித்து—எண்ணி, சார்ந்தாய்—சேர்ந்தாய், சார்ந்தாய்க்கு—(அப்படிச்) சேர்ந்தவுனக்கு: சான்றாண்மை—பெருந்தன்மை. சார்ந்தார் கண்—(உன்னாற்) சேரப்பட்டவர்களிடத்தில். இல்லாயின்—இல்லையாயின், சார்ந்தோய்—சேர்ந்தவனே (அது எதையொக்குமெனில்) கேள்—நீ கேள். ஒருவன்—ஒருவன். சாந்து—சந்தனம். அகத்து—இதனுள்ளே, உண்டென்று—இருக்குமென்று (நினைத்து). செப்பு—பரணியை, திறந்து—திறந்து. பாம்பு—பாம்பை. அகத்து—அதனுள், கண்டதுடைத்து—பார்த்ததையொக்கும். எ-று.

சமயமில்லையென்கிற சம்பத்து.

ஒரு சமயம், ஒரு லோபி, அபூநவாஸ் என்னும் ஒரு விகடகவியுடன் ஒரு கடையை வாடகைக்கு அமர்த்த எண்ணி ஒரு நகரத்திலிருந்த ஒரு கடைத்தெருவிற்குப் போய் அங்கே காலியாயிருந்த ஒரு கடையினருகே உட்கார்ந்து கொண்டு, "இந்தக்கடையில் இன்னின்னசரக்கு வியாபாரஞ் செய்யலாம், இன்னவை வியாபாரம் செய்வதற்காகா" என்று இருவரும் பேசிக்கொண் டிருந்தார்கள். அப்பொழுது அங்கே சில பிச்சைக்காரர்கள் வந்து பிச்சை கேட்டார்கள். லோபி அவரைப்பார்த்து, "இதுதானோ வேளை பிச்சைகேட்க, போய்வாருங்கள்" என்று கூறி அனுப்பினான். அப்பால் சற்று நேரம் பொறுத்துச் சில பகீர்கள் வந்து நின்று பாடினார்கள். லோபி அவர்களைப் பார்த்து, "இப்பொழுது சமயமில்லை. அடுத்தகடைக்குப் போய் வாருங்கள்" என்றனுப்பிவிட்டு முன்போல் அபூநவாஸுடன் பேசிக்கொண் டிருந்தான். பின்னுங் கொஞ்ச நேரங் கழித்து ஒரு குருடன் வந்து யாசித்தான். அவனுக்கும் லோபி "சமயமில்லை போய்வா" என்றனுப்பினான். பிறகு முடவனொருவனும் நோயாளியொருவனும் சேர்ந்தாற்போல் வந்தார்கள். லோபி அவர்களைப் பார்த்து, உங்களுக்கு இந்தப் பட்டணத்தில் நான் தான் அகப்பட்டேனோ? வேறே இடம் பாருங்கள்" என்று கூறி அனுப்பிவிட்டு அபூநவாஸைப்பார்த்து, "இந்தக் கடை நமக்

குதவாது. இதைச் சும்மா வாடகையில்லாமல் கொடுத்தாலும் வேண்டாம்'' என்றான்.

அபூநவாஸ், லோபியை நோக்கி, ஒரு தரம் குலுங்க நகைத்துவிட்டு, "என்ன இப்படியோசியாமல் பேசுகிறாய்? இதுதான் நல்லகடை. இதைவிட இந்தப்பட்டணத்தில் வேறு கடை நமக்கெங்கே அகப்படப்போகிறது? என்ன காரணத்தினால் நீ இந்தக்கடை உதவாதென்கிறாய்''? என்று கேட்டான்.

லோபி, "இந்தச் கடையில் ஏழை எளிய ஜனங்கள் வந்து ஈ மொய்ப்பதுபோல் மொய்க்கிறார்கள்; ஆகையினால் இது உதவாது'' என்று சொன்னான்.

அபூநவாஸ், "ஓ இதற்குத்தானா மலைக்கிறாய்? இப்போது வந்ததைவிடப் பதினாயிரமடங் கதிகமாக வந்து ஏழைகள் பிச்சைகேட்டாலும் ஒருகாசுகூடச் செலவில்லாமல் கொடுத்துக்கொண்டே வர, "இப்போது சமயமில்லை, போய்வாருங்கள்'' என்று எளிதிற் கூறி அனுப்புகிற குறையாநிதி உன்னுடைய நாவிலிருக்கும்போது இப்படியேன் மலைக்கவேண்டும்?'' என்று கேட்டான்.

லோபி இதைக் கேட்டதும் வெட்கமடைந்து, "நாளைக்குவந்து கடை பார்க்கலாம்; இன்று புறப்பட்ட வேளை நல்லவேளையல்ல'' என்றுகூறி அந்த இடத்தை விட்டு எழுந்தான். அபூநவாஸனும், "இந்தப் பிறவியும் மனிதப்பிறவியோடு உலாவுகிறதே'' என்றெண்ணிக் கொண்டெழுந்தான். இருவரும் பிறகு பல பேசிக்கொண்டு சென்றார்கள்.

மெய்—பொய்

கண்ணாற்கண்டதும் பொய்—காதாரக் கேட்டதும் பொய்
தீரவிசாரித்துத் தெளிந்து முடிவுசெய்வதே மெய்

கொள்ளைக்குப்போனாலும் கூட்டு ஆகாது.

ஒரு நகரத்தில் ஓர் ஏழைப்பிராமணனிருந்தான். அவனிடம் இரண்டு பசுக்களிருந்தன. அவன் பசுக்களை நன்றாய்ப் போஷித்து வந்தமையினால் அவை பார்வைக்கு வெகு அழகாய்க் கொழுத்திருந்தன. அவற்றைத்திருடிக்கொண்டுபோக எண்ணி இரண்டு திருடர்கள் ஒருநாள் இரவு புறப்பட்டு வந்தனர். வரும் வழியில் ஓர் இராக்ஷஸன் அவர்களை அதட்டி "நீங்கள் எங்கே போகிறீர்கள் ?" என்று கேட்டான். அவர்கள் பயந்து "நாங்கள் பிராமணனுடைய பசுக்களைத்திருடப்போகிறோம்" என்று உண்மையைச் சொல்லி விட்டார்கள். இராக்ஷஸன் "இரண்டு" பசுக்கள் வைத்துக்கொண்டிருக்கிறானே அந்தப்பிராமணனிடந்தானே?" என்று கேட்டான். திருடர்கள், "ஆம்" எனவே, இராக்ஷஸன் "நான் அவனைப் பக்ஷிக்க எண்ணியுள்ளேன். நான் அவனை முதலில் தின்றுவிடுகிறேன். பிறகு நீங்கள் பசுக்களைக்கவர்ந்து கொள்ளுங்கள்" என்றான். திருடர்கள்கேட்டு, "ஆகா ! சமயோசிதம்போற் செய்துகொள்வோம் வா" என்றனர். மூவரும் புறப்பட்டுப் பிராமணன் வீட்டிற்குப் போயினர். பிராமணன் அப்பொழுது தூங்கிக்கொண்டிருந்தான். அதனை நல்லசமயமென்றறிந்து சந்தோஷப்பட்டார்கள். இராக்ஷஸன் முன் பேசியபடி பிராமணனைப் பக்ஷிக்கப்போனான். திருடர்கள், அவனைத்தடுத்து, "நீ சற்றுப்பொறு. நாங்கள் மாட்டைப் பிடித்துக்கொண்டு போனபிறகு நீ பிராமணனைப்புசி.

ஏனென்றால் நீ அவனைப்புசிக்கும்போது வேறொருவன் விழித்துக்கொண்டால் எங்கள் காரியம் நிறைவேறாது" என்று கூறினார்கள். இராக்ஷஸன், பசுக்கூச்சலால் பிராமணன் விழித்துக்கொண்டால் நம்மிருவருடைய காரியமும் கெட்டுவிடும். ஆதலால் நான் முதலில் பிராமணனைப் புசித்துவிடுகின்றேன்" என்றான்.

இதன்பேரில் நீ முன்னே நான் முன்னே என்று சச்சரவுண்டாயிற்று. இவர்களிடும் கூச்சலில் பிராமணன் விழித்துக்கொண்டான். பின் இருவர் காரியமும் கெட்டுவிட்டது. இராக்ஷஸனும் ஓடிவிட்டான். திருடர்களும் ஓடி விட்டார்கள்.

எப்போதும் துணைகொள்வதில் கவனமாயிருக்க வேண்டும். இப்படிப்பட்ட துணைகொண்டால் காரியங் கெடு மென்பது இக்கதையினால் அறியலாகுமல்லவா?

ஹாஸ்யம்.

சே! சே! ஒரே மனசு அம்மா!

தோப்பூரில் பாப்பம்மாள் என்னும் ஆப்பக்காரி ஒருத்தியிருந்தாள். அவளிடம் பிரதிதினமும் ஆப்பம் வாங்க அநேக பெண்டுகள் வந்து போவார்கள். இப்படி வருபவரிடமெல்லாம் பாப்பம்மாள் தன் வீட்டு விவகாரத்தை மெத்தவும் பெருமை பாராட்டிப் பேசுவது வழக்கம்—ஒருநாள் பாப்பம்மாள் தனியாயிருந்த போது முனியாயி என்பவள் முகவாட்டத்துடன் வந்தாள். பாப்பம்மாள் அவளை நோக்கி "முனியாயி! என்ன ஒரு மாதிரியா யிருக்கிறாய்? பேதிக் கெடுத்துக் கொண்டாயோ

(மல நிவர்த்திக்கு மருந் தெடுத்துக் கொண்டாயோ)'' என்று கேட்டாள். "இல்லையம்மா—இல்லே. வீட்டிழவுதான் பெரிய இழவா இருக்குதே. இரண்டுநாளைக் கொருதரம் கொல்லைக்குப் போகிற எனக்கு இந்த இழவால் தினம் பத்துப் பதினைந்து தரம் போயும் வயிற்றுக் கடுப்பு அடங்கின பாட்டைக் காணோம். இப்படிப்பட்ட சம்பிரமத்தில் பேதிக்கும் எடுத்துக் கொள்ள வேண்டுமா?'' என்றாள்.

"அப்படியானால் முகவாட்டமா யிருப்பதற்குக் காரண மென்ன? எங்களுக்கில்லாத வீட்டிழவு உனக்கு மாத்திரம் அதிகமாயிருக்கிறதோ?'' என்று பாப்பம்மாள் முனியாயியைப் பார்த்துக்கேட்டாள்.

முனியாயி "சும்மா முறைமைக்குச் சொன்னேன். பின்னை என்ன அம்மா! பதார்த்தத்தில் ஒருகல் உப்பு குறைந்து போயிற்றும். அதற்கு எங்கள் வீட்டுக்காரர் (புருஷன்) ஆவேசம் பிடித்தவர் போல் ஆடினார். வாயில் வந்ததைப் பாடினார். மற்றொன்றுஞ் செய்யவில்லே. இந்தக் கஷ்டத்தைத்தான் நாமேன் அவருக்குக் கொடுத்தோம் என்கிற எண்ணம் எனக்குண்டாயிற்று. அதனால் ஒரு மாதிரியா யிருக்கிறேன்'' என்றாள். உடனே பாப்பம்மாள் "முனியாயி! நானும் எங்கள் வீட்டுக்காரரும் எப்படி யிருக்கிறோம்? நீயுந்தான் எங்கள் வாழ்வை உன் கண்ணால் பார்த்துக் கொண்டு வருகிறாயே. அவருக்காவது எனக்காவது எந்தக் காலத்திலாவது முகவாட்டம் ஏற்பட்ட துண்டா? ஏனக்கென்று நீ பொய பேசவேண்டாம். எதோ விரலைவிடு பார்ப்போம்—'' என்று இடுப்பிலிருந்த குழந்தையைக் கீழே தொப்பென்று இறக்கிப் போட்டுக் குறுக்கே வந்த பையனொருவனை "நீ அப்படிப் போடா?'' என்று பிடித்துத் தள்ளிவிட்டு, முனியாயி கையை முறுக்கிப் பிடித்திழுத்துச் சென்றாள்.

முனியாயி "கையை விடம்மா—உன் வயிற்றெரிச்சலை என் கை தாளாது. நீங்களென்னமோ அந்நியோந்நிய மாகத்

தான் இருக்கிறீர்கள். ஆனால் கூழுக்கு மாங்காய் தோற்காதது போல உங்கள் வீட்டுக் காரருடைய குரலுக்கு உன்குரல் தோற்றதை நான் ஒரு நாளும் பார்த்ததில்லை—ஒன்றுக் கொன்று தோற்பு கெலிப்பு அடையாமற்றான் இருந்து வருகிறது. சும்மா சொல்லவா? நானும்—இன்று நேற்றல்லவே—நீ கலியாணம் பண்ணிக் கொண்டு உன் புருஷனோடு இங்கு வந்து சேர்ந்த பதினைந்து வருஷமாய் உங்களைப் பார்த்துவருகிறேன். ஆனால் உன் மனசுபோல உங்கள் முதலியார் மனசு இராதென்று நினைக்கிறேன்" என்றாள்.

இப்படி முனியாயி சொல்லி முடிப்பதற்குள், பாப்பம்மாள் "சே! சே!! ஒரே மனசு அம்மா!!! நீ என்ன வித்தியாசமாய் நினைக்கிறாப்போல் தோணுது. இப்படித்தான் நான் பழிகாரி என்று பேர் படைத்து விடுகிறேன்" என்று கல கல வென்று கண்களிலிருந்து ஜலத்தைக் கொட்டினாள். முனியாயி பாப்பம்மாளை அணைத்துப் பிடித்து "நான் என்ன சொல் லிவிட்டே னென்று நீ இவ்விதங் கண்கலக்கங் கொள்கிறாய். நீயும் உன் எஜமானும் ஒரே மனசா யிருக்கவேண்டு மென்று தானே நாங்கள் விரும்புகிறோம். அப்படி நீங்கள் ஒற்றுமையா யிருக்கிற விஷயத்தில் எங்களுக்கு மிகவும் சந்தோஷம்" என்று கூறினாள்.

பாப்பம்மாள், "முனியாயி! கலியாணம் நிச்சயித்த போது எங்களுடைய பொருத்த நிமித்தத்தைப் பொறுக்கிப் பொறுக்கிப் பிட்டுப் பிட்டுப் பார்த்த அப்பளாசாரி தலைமுதல் கால் வரையில் எல்லாப்பொருத்தமும் எங்களுக்குச் சரியாயிருக்கிறதாகக் கணக்கெடுத்துச் சொல்லிவிட்டார். ஆனால் வாக்குப்பொருத்தத்தை மட்டும் கவனிக்க அவருக்கு அப்போது சவகாசமில்லை. அவருடைய நினைவெல்லாம் எப்போதும் அப்பளத்தின் மீது தான் இருக்கும். அதனால் அதை அவர் விட்டுவிட்டார். அவர் விட்டு விட்டாலும் நாங்கள் விடுவோமா? அந்தப் பொருத்தமும் எங்களிருவருக்கும் சரிசமான மென்பதை ஒவ்வொருநாளும் பொழு

தவிடிந்தது முதல் மறு பொழுது விடியுமளவும் எல்லோருக்கும் நாங்களே ரூபித்து வருகிறோம். எனக்கு அவரோடு எதிர்த்துப் பேசவேண்டு மென்கிற மனசுண்டு. அவருக்கு என்னோடு எதிர்த்துப் பேசவேண்டு மென்கிற மனசுண்டு—இந்த இரண்டு மனசுக்கும் ஒரே அபிப்பிராய மிருக்கும்போது இரண்டும் ஒன்றுதானே. ஆகையாற்றான் இதை அறிந்து கொள்ளாத உன் போல்வார்க்கு 'சே! சே!! எங்களிருவருக்கும் ஒரே மனசு அம்மா' என்று சொல்லிவருகிறோம்" என்றாள்.

இதைக் கேட்ட முனியாயி "அப்படியா என்று தன்னுடைய வலது கையைத் தன் முகவாய்க் கட்டையின் மேல் மெதுவாய் வைத்து "இந்த ஒற்றுமை இப்படியே சந்திர சூரியரிருக்குமட்டும் இருக்கவேண்டும்" என்று ஆசீர்வதித்து விட்டுத் தன் வீட்டுக்குப் போயினாள்.

"பொருளிலார்க் கிவ்வுலகமில்லை" என்றும், "பணமில்லாதவன் பிணம்" என்றும், "இல்லானை இல்லாளும் வேண்டாள்" என்றும், "ஈன்றெடுத்ததாய் வேண்டாள்" என்றும்—உலகத்தில் பணம்படையாதவர்களைப் பற்றி இகழ்ந்து பேசுகிறார்கள். ஆகையால் எப்பாடுபட்டேனும் பணத்தைச் சம்பாதிக்க வேண்டுமென்பது நாமுணரத்தக்கதாம். பணத்தைச் சம்பாதிப்பதற்கு விருப்பமுடையவர்கள், சோம்பல், துயில், அச்சம், சினம், மறதி, சுறுசுறுப்பின்மை—முதலியவைகளை விட்டுவிடவேண்டும். சதாகாலமும் கண்ணும் கருத்துமாயிருந்து பொருள் வருவாய்க்குரிய சாதனங்களைத் தேடிக்கொண்டு அவற்றில் பாடுபடவேண்டும்.

சகல சாஸ்திர பண்டிதனானாலும், அவன் பணமில்லாதவறிஞனானல், அவனுடைய சக்தியும், புத்தியும், உப்பு வேண்டும், புளி வேண்டும், அரிசிவேண்டும், ஆடை வேண்டும்—என்கிற சிந்தனையாகிற நெருப்பிற்கு இரையாகின்றன.

வெள்ளிமலை யொத்தபல மேடை.

என்ற காவடிச் சிந்து மெட்டு.

சுப்பிரமணியர் ஸ்துதி.

ஈசாவுன் விடயமாம் பாடல்—பாடி
என்றைக்குநா னுந்தனருள் தேடல்—மிக
வீணக்காசா சையிற்சிக்கி மானம்விட்டலைந்தேனிது
எது—புவி—சூது.

தேஜோமய மாமுருகேசா—உன்னைத்
தினமும்போற் றிப்புகழ நேசா—என்றும்
திண்யகண பதிசுப்ர மண்யனுக்கு மெந்தனுக்குத்
தேனே—அருள்—கோனே

பாழும்பொன்னாசையினில் மனமே—பட்டுப்
பரதவிக் கின்றதையா தினமே—இந்தப்
பாதகம்போம் உந்தனது பாதகமலத்தை எண்ணப்
பண்ணே—எந்தன்—கண்ணே

வாழுகின்ற வாழ்க்கையென்ன சதமே—நாளை
வந்திடு வானே கூற்று அதமே—செய்ய
வாதம்பலித் திடுமோபற் காதம்போனு லும்மொழிக
மறமே—செய்க—அறமே

தெள்ளிச்சித் தந்தெருட்டித் தேவே—நெஞ்சில்
திவ்யாமிர்த மூரச்செய்யென் கோவே—யிந்தத்
தேகந்நழு விடிற்பின்பு ஆகும்காரி யம்யாதாமோ
தெரியேன்—உன்னை—யறியேன்

பள்ளவிடம் பார்த்திடுநற் புனல்போல்—என்றன்
பாவிமனம் கெட்டுவேகும் அனல்போல்—என்றும்
பாகம் பழுத்தோனது மோகமுற்றிலுமே கொண்ட
பாலா—காப்பாய்—சீலா.

வேறுகதி யின்றியுன்றன் தாளை—மிக
வேட்டேய டைந்தேனிந்த வேளை—என்றும்
வேடர்குலப் பிடியோடு வேடிக்கைபே சிக்களிக்கும்
வேலா—சூரன்—காலா

வாதைப்ப டுவதழ காமோ—யார்க்கும்
மாண் பொரு ணீயல்லால்வே றுமோ—சொல்லாய்
வண்மையுள்ள பன்னிருகை எண்ணறிய சேவகனே!
வாராய்—இன்பம்—தாராய். சுபம்!

தே. [illegible] கணபதி [illegible]மண்ய அய்யர்,
தமிழ்[illegible] கொள்ளேகாலம்.

THE TA[illegible] PRINTING WORKS, 5, THAMBU CHE[illegible] ST., MADRAS.

186454